மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே. ஆய்வு எப்படி செய்யப்பட்டிருக்கிறதோ, அதைப்போலத்தான் பணிகள் நடக்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து எந்தெந்தக் கிராமங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டு, ஏதாவது கிராமங்கள் விடுபட்டிருக்குமேயானால், அவைகளைச் சேர்க்க வேண்டும் என்பதைச் சொன்னால், கூடுமானவரையில் அவைகளை சேர்ப்பதற்கு அரசு முயற்சி எடுக்கலாம்.

நரிக்குடி ஒன்றியப் பகுதிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* வினா எண். 211 திரு க. பாரமலை : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் நரிக்குடி ஒன்றியம் வாகைக்குளம், புளியங்குளம், பட்டனந்தல் ஆகிய கிராமங்களுக்கு பொதுவாக ஒரு கூட்டுக்குடிநீர் திட்டம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் நடப்பு நிதியாண்டில் (1981-82) இரண்டாம் கட்ட தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

திரு க. பாரமலை: பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே தன்னிறைவுத் திட்டம் இந்த வட்டாரங்களில் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக இதனை முடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே 69 ஒன்றியங்களை எடுத்துச் செய்தோம். இப்பொழுது 150 ஒன்றியங்களை எடுத்திருக்கிறோம். அதிலேயே இதுவும் வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1982 பிப்ரவரி 15]

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக்குடிநீர் திட்டம் என்பது மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக, அந்தக் கஷ்டத்திலிருந்து அவர்களை நிவர்த்தி செய்வதற்காக போடப்படுகிற திட்டம். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், இந்தத் திட்டங்களில் எல்லாம், எலக்ட்ரிக் பம்புதான் வைத்திருக்கிறார்கள். பவர்கட் வருகிற நேரத்தில், அல்லது மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகின்ற நேரத்தில் அவைகள் இயங்குவது இல்லை. ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் ஆயில் என்ஜின்கள் வைத்து தண்ணீர் இறைபதற்கான முறையில் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணியை தனிப்பிரிவின்கீழ் கொண்டுவரும் திட்டம்

* வினா எண் 212 திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குழாய்க்கிணறு அமைப்புப் பணியை தனியமைப்பாகப் பிரிக்கும் யோசனை உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடை "இல்லை."

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்ட இடங்களில் சில சீராக இயங்காத காரணத்தினாலும், செப்பனிடப்படாத நிலையில் செம்மையாக நீர் இறைக்க முடியாத காரணத்தினாலும், அரசும் அமைச்சரும் எதிர்பார்க்கிற பலன்கள் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் கிடைக்க முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் தான் இதில் தனிப்பட்ட அக்கறை செலுத்துவதற்கு ஒரு தனி அமைப்பு வேண்டும் என்று கேட்கப்பட்டது. ஆகவே, அதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுக்குமா மீண்டும் அதை பரிசீலிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, பராமரிப்பைப் பற்றி ஒரு பரிசீலனை செய்து கீழ்க்கண்ட முடிவை எடுத்திருக்கிறோம்.